செ.வெ.எண். 365 நாள் : 12.07.2025

# <u>பத்திரிக்கைசெய்தி</u>

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இந்த ஆண்டு சட்டமன்ற பேரவையில் மக்களின் குறைகளை நேரடியாக கேட்டறியும் பணிகள் துவக்கப்படும் எனஅறிவித்திருந்தார். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பின்படி, தமிழ்நாட்டில் உள்ள அனைத்து நகர்ப்புற மற்றும் ஊரகப் பகுதிகளில் **"உங்களுடன் ஸ்டாலின்"** என்ற திட்டம் துவக்கப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் மொத்தம் 10,000 சிறப்பு முகாம்கள் நடத்தப்பட விருக்கிறது.

அந்த வகையில், நீலகிரி மாவட்டத்தில் முதற்கட்டமாக **"உங்களுடன் ஸ்டாலின்"** திட்ட முகாமானது எதிர்வரும் **15.07.2025 முதல் 14.08.2025 வரை** உதகமண்டலம், கோத்தகிரி, குன்னூர் மற்றும் குந்தா ஆகிய வட்டங்களுக்குட்பட்ட நகராட்சிகள், பேரூராட்சிகள் மற்றும் கிராம ஊராட்சிகள் வாரியாக நடைபெறவுள்ளது. அதன்படி, எதிர்வரும் **15.07.2025** அன்று குன்னூர் நகராட்சிக்குட்பட்ட வார்டு 1 மற்றும் 2-ற்கான முகாம் **பாலக்லவா ஜெயின் மண்டபத்திலும்**, கோத்தகிரி நகராட்சிக்குட்பட்ட வார்டு 1,2 மற்றும் 3-ற்கான முகாம் **தாந்தநாடு சமுதாய கூடத்திலும்**, அதிகரட்டி பேரூராட்சிக்குட்பட்ட வார்டு 1, 8, 9, 10, 11, 12, 14,15,16,17 மற்றும் 18-ற்கான முகாம் **பிக்கோல் சமுதாய கூடத்திலும்**, ஜெகதளா பேரூராட்சிக்குட்பட்ட வார்டு 5,6,7,8,9,10,11 மற்றும் 12-ற்கான முகாம் **ஜெகதளா சமுதாய கூடத்திலும்**, குன்னூர் வட்டம், வண்டிசோலை ஊராட்சிக்குட்பட்ட பகுதிகளுக்கான முகாம் **சோலாடா மட்டத்திலுள்ள என்.என்.டி கட்டிடத்திலும்,** கோத்தகிரி வட்டம், கடினமாலா ஊராட்சிக்குட்பட்ட பகுதிகளுக்கான முகாம் **தேனாடு ஊராட்சி அலுவலகத்திலும்** நடைபெறவுள்ளது.

அதனை தொடர்ந்து, **16.07.2025 அன்று** உலிக்கல் பேரூராட்சிக்குட்பட்ட 1 முதல் 18 வார்டுகளுக்கான முகாம் **சுங்கம் சி.எஸ்.ஐ சமுதாய கூடத்திலும்**, குன்னூர் வட்டம் பர்லியார் ஊராட்சிக்குட்பட்ட பகுதிகளுக்கான முகாம் **கோடமலை சமுதாய கூடத்திலும்,** கோத்தகிரி வட்டம் தேனாடு ஊராட்சிக்குட்பட்ட பகுதிகளுக்கான முகாம் **சோலூர்மட்டம் ஊராட்சி அலுவலகத்திலும்** நடைபெறவுள்ளது. தொடர்ந்து, **17.07.2025 அன்று** குன்னூர் நகராட்சிக்குட்பட்ட வார்டு 3 மற்றும் 4-ற்கான முகாம் **சகாயமாதா கோவில் மண்டபத்திலும்**, கோத்தகிரி நகராட்சிக்குட்பட்ட 4, 9 மற்றும் 11-ற்கான முகாம் **நிவாரண மையம், காந்தி மைதானத்திலும்**, கேத்தி பேரூராட்சிக்குட்பட்ட 1 முதல் 12 வார்டுகளுக்கான முகாம் **அச்சனக்கல் சமுதாய கூடத்திலும்,** குன்னூர் வட்டம், பேரட்டி ஊராட்சிக்குட்பட்ட பகுதிகளுக்கான முகாம் **பேரட்டி சமுதாய கூடத்திலும்**, கோத்தகிரி வட்டம், ஜக்கனாரை ஊராட்சிக்குட்பட்ட பகுதிகளுக்கான முகாம் **ஜக்கனாரை மேல் கேரி மண்டபத்திலும்** நடைபெறவுள்ளது.

தொடர்ந்து, **18.07.2025** அன்று குன்னூர் வட்டம், மேலூர் ஊராட்சிக்குட்பட்ட பகுதிகளுக்கான முகாம் **தூதூர் மட்டம் சமுதாய கூடத்திலும்,** கோத்தகிரி வட்டம், கொணவக்கரை ஊராட்சிக்குட்பட்ட பகுதிகளுக்கான முகாம் **கொட்டகம்பை பல்நோக்கு கட்டிடத்திலும்** நடைபெறவுள்ளது. தொடர்ந்து, **22.07.2025** அன்று குன்னூர் நகராட்சிக்குட்பட்ட வார்டு 7 மற்றும் 8-ற்கான முகாம் **பெட்போர்டு, பாரதியார் மண்டபத்திலும், கோத்தகிரி நகராட்சிக்குட்பட்ட வார்டு** 6,7 மற்றும் 19-ற்கான முகாம் **கேர்பெட்டா நடுஹட்டி சமுதாய கூடத்திலும்,** அதிகரட்டி பேரூராட்சிக்குட்பட்ட வார்டு 2 முதல் 7 மற்றும் 13-ற்கான முகாம் **தூரட்டி சமுதாய கூடத்திலும்**, குன்னூர் வட்டம், உபதலை ஊராட்சிக்குட்பட்ட பகுதிகளுக்கான முகாம் **பெரிய உபதலை சமுதாய கூடத்திலும்,** கோத்திகிரி வட்டம், கெங்கரை ஊராட்சிக்குட்பட்ட பகுதிகளுக்கான முகாம் **பக்காடா நூலக கட்டிடத்திலும்** நடைபெறவுள்ளது. தொடர்ந்து, **23.07.2025** அன்று கோத்திகிரி வட்டம், அரக்கோடு ஊராட்சிக்குட்பட்ட பகுதிகளுக்கான முகாம் சோலூர் மட்டத்தில் உள்ள ஊராட்சி அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.

தொடர்ந்து, **24.07.2025** அன்று குன்னூர் நகராட்சிக்குட்பட்ட வார்டு 9, 10 மற்றும் 11-ற்கான முகாம் **பெட்போர்டு, பாரதியார் மண்டபத்திலும்,** கோத்தகிரி நகராட்சிக்குட்ப்பட்ட வார்டு 20 மற்றும் 21-ற்கான முகாம் **நிவாரண மையம், காந்தி மைதானத்திலும்,** குன்னூர் வட்டம், எடப்பள்ளி ஊராட்சிக்குட்ப்பட்ட பகுதிகளுக்கான முகாம் **இளித்தொரை சமுதாய கூடத்திலும்,** கோத்தகிரி வட்டம், கோடநாடு ஊராட்சிக்குட்பட்ட பகுதிகளுக்கான முகாம் **சுண்டட்டி சமுதாய கூடத்திலும்** நடைபெறவுள்ளது. தொடர்ந்து, **25.07.2025** அன்று கோத்தகிரி வட்டம், குஞ்சப்பனை ஊராட்சிக்குட்பட்ட பகுதிகளுக்கான முகாம் **அரவேணு சிவஹரி மஹாலிலும்** நடைபெறவுள்ளது.

தொடர்ந்து, எதிர்வரும் **29.07.2025** அன்று குன்னூர் நகராட்சிக்குட்பட்ட வார்டு 12, 13 மற்றும் 14-ற்கான முகாம் **பாலக்லவா, ஜெயின் மண்டபத்திலும்**,கோத்தகிரி நகராட்சிக்குட்பட்ட வார்டு 5, 8 மற்றும் 17-ற்கான முகாம் **நிவாரண மையம், காந்தி மைதானத்திலும்,** குன்னூர் வட்டம், கேத்தி பேரூராட்சிக்குட்பட்ட வார்டு 6,7,8,13,14,15,16,17 மற்றும் 18-ற்கான முகாம் **உல்லாடா சமுதாய கூடத்திலும்**, குன்னூர் வட்டம்,மேலூர் ஊராட்சிக்குட்பட்ட பகுதிகளுக்கான முகாம் **ஆறுகுச்சி சமுதாய கூடத்திலும்,** கோத்தகிரி வட்டம், நெடுகுளா ஊராட்சிக்குட்பட்ட பகுதிகளுக்கான முகாம் நெடுகுளா சமுதாய கூடத்திலும் நடைபெறவுள்ளது. தொடர்ந்து, எதிர்வரும் **30.07.2025 அன்று** கோத்திகிரி வட்டம், நடுஹட்டி ஊராட்சிக்குட்பட்ட பகுதிகளுக்கான முகாம் **வெஸ்ட்/ புரூக் வி.பி.ஆர்.சி கட்டிடத்தில் நடைபெறவுள்ளது.**

தொடர்ந்து, எதிர்வரும் **31.07.2025 அன்று** குன்னூர் நகராட்சிக்குட்பட்ட வார்டு 15 மற்றும் 16-ற்கான முகாம் **பெட்போர்டு, பாரதியார் மண்டபத்திலும்**, கோத்தகிரி நகராட்சிக்குட்பட்ட வார்டு10 மற்றும் 18-ற்கான முகாம் **நிவாரண மையம், காந்தி மைதானத்திலும்,** கோத்தகிரி வட்டம், ஜெகதளா பேரூராட்சிக்குட்பட்ட வார்டு 1,2,3,4,13,14 மற்றும் 15-ற்கான முகாம் **பெட்டட்டி சமுதாய கூடத்திலும்**, குன்னூர் வட்டம்,பர்லியார் ஊராட்சிக்குட்பட்ட பகுதிக்களுக்கான முகாம் **பர்லியார் அரசு விதைப் பண்ணையிலும்**, கோத்தகிரி வட்டம், தேனாடு ஊராட்சிக்குட்பட்ட பகுதிக்களுக்கான முகாம் **கக்குளா சமுதாய கூடத்திலும்** நடைபெறவுள்ளது. தொடர்ந்து, எதிர்வரும் **01.08.2025 அன்று** குன்னூர் நகராட்சிக்குட்பட்ட வார்டு 17,18 மற்றும் 19-ற்கான முகாம் **குன்னூர் ஜான் சர்ச் வளாகத்திலும்.** குந்தா வட்டம், பிக்கட்டி பேரூராட்சிக்குட்பட்ட வார்டு 1 முதல்15-ற்கான முகாம் **பிக்கட்டி உயர்நிலைப் பள்ளியிலும்,** கோத்தகிரி வட்டம், தெங்குமரஹாடா ஊராட்சிக்குட்பட்ட பகுதிகளுக்கான முகாம் **தெங்குமரஹாடா அரசுப் பள்ளியிலும்** நடைபெறவுள்ளது.

தொடர்ந்து, எதிர்வரும் **05.08.2025 அன்று** கோத்தகிரி நகராட்சிக்குட்பட்ட வார்டு 12 மற்றும் 13-ற்கான முகாம் **நிவாரண மையம், காந்தி மைதானத்திலும்,** உதகமண்டலம் நகராட்சிக்குட்பட்டவார்டு 1, 2, 7 மற்றும் 8-ற்கான முகாம் **ஒக்கலிகர் கல்யாண மண்டபத்திலும்,** குன்னூர் வட்டம், பேரட்டி ஊராட்சிக்குட்பட்ட பகுதிகளுக்கான முகாம் **மேல் பாரத் நகர் சமுதாய கூடத்திலும்.** உதகமண்டலம் வட்டம், தொட்டபெட்டா ஊராட்சிக்குட்பட்ட பகுதிகளுக்கான முகாம் **முத்தோரை சமுதாய கூடத்திலும்** நடைபெறவுள்ளது. தொடர்ந்து, எதிர்வரும் **06.08.2025** அன்று குன்னூர் வட்டம், மேலூர் ஊராட்சிக்குட்பட்ட பகுதிகளுக்கான முகாம் கொலகம்பை **சி.எஸ்.ஐ பள்ளி மைதானத்திலும்**, கோத்திகிரி வட்டம், நெடுகுளா ஊராட்சிக்குட்பட்ட பகுதிகளுக்கான முகாம் **மிளத்தேன் அரசுப்பள்ளியிலும்**, குந்தா வட்டம், பாலகொலா ஊராட்சிக்குட்பட்ட பகுதிகளுக்கான முகாம் **தேனாடு சமுதாய கூடத்திலும்** நடைறெவுள்ளது. தொடர்ந்து, எதிர்வரும் **07.08.2025** அன்று குன்னூர் நகராட்சிக்குட்பட்ட வார்டு 20, 21 மற்றும் 22-ற்கான முகாம் **சிம்ஸ் பார்க் ஆண்டனி பள்ளியிலும்**, உதகமண்டலம் நகராட்சிக்குட்பட்ட வார்டு 20, 21 மற்றும் 22-ற்கான முகாம் **உதகை ஸ்ரீனிவாச பெருமாள் கல்யாண மண்டபத்திலும்**, கீழ்குந்தா பேரூராட்சிக்குட்பட்ட வார்டு 1,6,7,8,9 மற்றும் 13-ற்கான முகாம் **முள்ளிமைல அரசு உயர்நிலைப் பள்ளியிலும்,** குன்னூர் வட்டம், உபதலை ஊராட்சிக்குட்பட்ட பகுதிகளுக்கான முகாம் **சின்னபிக்கட்டி சமுதாய கூடத்திலும்**, கோத்திகிரி வட்டம், எப்பநாடு ஊராட்சிக்குட்பட்ட பகுதிகளுக்கான முகாம் **அரவேணு பஜார் சிவாலாய மண்டபத்திலும்,** உதகமண்டலம் வட்டம், எப்பநாடு ஊராட்சிக்குட்பட்ட பகுதிகளுக்கான முகாம் **எப்பநாடு சமுதாய கூடத்திலும்** நடைபெறவுள்ளது.

தொடர்ந்து, எதிர்வரும் **08.08.2025** அன்று குன்னூர் வட்டம்,எடப்பள்ளி ஊராட்சிக்குட்பட்ட பகுதிகளுக்கான முகாம் **பெல்லட்டி மட்டம், சமுதாய கூடத்திலும்**, கோத்தகிரி வட்டம், நடுஹட்டி ஊராட்சிக்குட்பட்ட பகுதிகளுக்கான முகாம் **குண்டாடா சமுதாய கூடத்திலும்**, குந்தா வட்டம், இத்தலார் ஊராட்சிக்குட்பட்ட பகுதிகளுக்கான முகாம் **கல்லகொரை சமுதாய கூடத்திலும்** நடைபெறவுள்ளது.

தொடர்ந்து, எதிர்வரும் **12.08.2025** அன்று குன்னூர் நகராட்சிக்குட்பட்ட வார்டு 23, 24 மற்றும் 25-ற்கான முகாம் **சிம்ஸ் பார்க் ஆண்டனி பள்ளியிலும்**, உதகமண்டலம் நகராட்சிக்குட்பட்ட வார்டு 17,18 மற்றும் 19-ற்கான முகாம் **YWCA அனந்தகிரி மஹாலிலும்,** குன்னூர் வட்டம், உபதலை ஊராட்சிக்குட்பட்ட பகுதிகளுக்கான முகாம் **வசம்பள்ளம் சமுதாய கூடத்திலும்**, கோத்தகிரி வட்டம், கொணவக்கரை ஊராட்சிக்குட்பட்ட பகுதிகளுக்கான முகாம் **கொணவக்கரை ஊராட்சி அலுவலகத்திலும்**, உதகமண்டலம் வட்டம், உல்லத்தி ஊராட்சிக்குட்பட்ட பகுதிகளுக்கான முகாம் **தலைகுந்தா அரசு ஊராட்சி ஒன்றிய துவக்கப் பள்ளியிலும்** நடைபெறவுள்ளது.

தொடர்ந்து, எதிர்வரும் **14.08.2025** அன்று குன்னூர் நகராட்சிக்குட்பட்ட வார்டு 26, 27 மற்றும் 28-ற்கான முகாம் **பெட்போர்டு, பாரதியார் மண்டபத்திலும்**, உதகமண்டலம் நகராட்சிக்குட்பட்ட வார்டு 3,4,6 மற்றும் 14-ற்கான முகாம் **ஸ்ரீனிவாசா பெருமாள் மண்டபத்திலும்**, சோலூர் பேரூராட்சிக்குட்பட்ட வார்டு 1 முதல் 12 வரை உள்ள வார்டுகளுக்கான முகாம் **ஓரட்டி சமுதாய கூடத்திலும்**, கோத்தகிரி வட்டம், கெங்கரை ஊராட்சிக்குட்பட்ட பகுதிகளுக்கான முகாம் **கெங்கரை சமுதாய கூடத்திலும்**, குந்தா வட்டம், குந்தா ஊராட்சிக்குட்பட்ட பகுதிகளுக்கான முகாம் **கூர்மியாபுரம் சமுதாய கூடத்திலும்** நடைபெறவுள்ளது.

நகராட்சி, பேரூராட்சி, ஊராட்சி பகுதிகளில் நடைபெறும் மேற்படி முகாம்களில் அனைத்து பகுதிகளையும் உள்ளடக்கி நடைபெறுவதால் தங்கள் பகுதிக்குச் சென்று ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள பகுதியில், அமைந்துள்ள முகாம்களில் மட்டும் கலந்துக்கொண்டு கோரிக்கை விண்ணப்பம் அளிக்குமாறு பொதுமக்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

எனவே, "**உங்களுடன் ஸ்டாலின்**" திட்டத்தில் தங்களது பகுதிகளில் நடைபெறும் முகாம்களில் பொதுமக்கள் அனைவரும் கலந்து கொண்டு பயன்பெறுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது. என மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி லட்சுமி பவ்யா தண்ணீரு இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

---

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், நீலகிரி மாவட்டம்.**
NilgirisPRO ProNilgiris NilgirisPRO